## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC.No. | 489/2023 |
| Prosecution: | அ.சா.1 |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | வினோத்குமார் |
| **Father/Husband Name** | ~ | |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 08.04.2026.**

**குறுக்கு விசாரணை**

1. என்ன படித்துள்ளீர்கள் என்றால் முதுகலை வரலாறு படித்துள்ளேன். என்ன தொழில் செய்து வருகிறீர்கள் என்றால் கெமிக்கல் டிரேடிங் செய்து வருகிறேன் எவ்வளவு காலமாக அந்த தொழிலை செய்து வருகிறீர்கள் என்றால் 2007 ஆம் ஆண்டு முதல் மேற்படி தொழில் செய்து வருகிறேன். எனக்கும் எதிரிக்கும் இடையே நடைபெற்ற மொத்த பரிவர்த்தனை பற்றியும் நான் தாக்கல் செய்த புகாரில் குறிப்பிட்டுள்ளீரா என்றால் குறிப்பிட்டுள்ளேன். புகார்தாரர் நிறுவனமானது தனிப்பட்ட நபருக்கு சொந்தமானதா அல்லது கூட்டான்மை நிறுவனமா என்றால் எனது பெயரில் உள்ள தனிப்பட்ட நிறுவனம் ஆகும். இவ் வழக்கின் எதிரியை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் மூன்று வருடமாக தெரியும் யார் மூலமாக தெரியும் என்றால் இன்டர்நேஷனல் லெதர் ஃபோரம் என்ற கண்காட்சி நிகழ்வில் பார்த்ததன் அடிப்படையில் தெரியும்.

2.மேற்படி விபரத்தை நான் தாக்கல் செய்த புகாரிலோ நிரூபண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டுள்ளார் என்றால் இல்லை. எனது நிறுவனத்தின் உரிமையாளர் தொடர்பாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் அது பற்றி ஞாபகம் இல்லை. எனது நிறுவனத்திற்கு ஜிஎஸ்டி வரிமுறையாக செலுத்தி உள்ளார் என்றால் செலுத்திய உள்ளேன் அந்த ஜிஎஸ்டி வரி பதிவுகளில் எனக்கும் எதிரில் நிறுவனத்திற்கும் நடைபெற்ற பரிவர்த்தனை பற்றி சொல்லி உள்ளீரா என்றால் சொல்லி உள்ளேன். அந்த ஜிஎஸ்டி வரி பதிவுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் அதனை வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளீரா என்றால் தயாராக உள்ளேன் என்ன காரணத்திற்காக அந்த ஜிஎஸ்டி வரி ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனக்கும் எதிரியின் நிறுவனத்திற்கும் எந்த வருடத்தில் முதன் முதலில் வியாபார பரிவர்த்தனை நடைபெற்றது என்றால் 2019 ஆம் ஆண்டு நடைபெற்றது. அந்த வியாபார பரிவர்த்தனை ரொக்கமாக நடைபெற்ற பரிவர்த்தனை என்றால் இல்லை வங்கி மூலம் நடைபெற்ற பரிவர்த்தனையாகும்.

3. எனக்கும் எதிரி நிறுவனத்திற்கும் நடைபெற்ற பரிவர்த்தனை தொடர்பாக ரசிதுகளை ஏற்படுத்தப்பட்டுள்ளதா என்றால் ஏற்படுத்தப்பட்டுள்ளது அந்த இன்வாய்ஸ் ரசிதுகளை வழக்கில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்துள்ளேன். எனக்கும் எதிரியின் நிறுவனத்துக்கும் இடையே நடைபெற்ற பரிவர்த்தனை தொடர்பான ரசீதுகளை வழக்கில் தாக்கல் செய்ய தயாராக உள்ளீரா என்றால் தயராக உள்ளேன். நான் தாக்கல் செய்த புகார் மனுவிலும் நிரூபன வாக்குமூலத்திலும் எதிரி நிறுவனத்திற்கு எந்த தேதியில் எவ்வளவு தொகைக்கு எனது நிறுவனம் மூலம் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டது என குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். எதிரி நிறுவனத்திடம் இருந்து எனது நிறுவனத்திற்கு பொருட்கள் வாங்குவதற்கு எழுத்துப்பூர்வமான கோரிக்கை கடிதம் ஏதேனும் அளிக்கப்படுமா என்றால் இல்லை வாய்மொழியாக சொல்வதன் அடிப்படையில் எனது நிறுவனம் மூலம் பொருட்கள் விற்பனை செய்தோம்.

4.வாய்மொழியாக தான் எதிரியின் நிறுவனத்திடம் எனது நிறுவனத்திற்கு பொருட்களை அனுப்புமாறு முன்பதிவு செய்வார்கள் என குறிப்பிட்டு சொல்லி உள்ளீரா என்றால் இல்லை. ஒவ்வொரு முறையும் எதிரியின் நிறுவனத்திற்கு எனது நிறுவனத்தில் இருந்து பொருட்கள் அனுப்பும்போது தொகையை பெற்றுக் கொண்டு பொருட்கள் அனுப்புவிரா அல்லது பொருட்கள் அனுப்பிய பின்னிட்டு தொகை பெற்று கொள்ளீரா என்றால் பொருட்களை அனுப்பி விட்டு பின்பு அந்த பொருளுக்கு உண்டான கடன் தொகை 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும் என கடன் அடிப்படையில் பொருட்களை எதிரி நிறுவனத்திற்கு விற்பனை செய்தேன். மேற்படி புகார் மனுவில் எதிரி நிறுவனத்திற்கு கடன் பேரில் அனுப்பப்படும் பொருட்களுக்கு 60 நாட்களுக்குள் தொகையை திருப்பி செலுத்தப்படுவார் என குறிப்பிட்டு புகாரில் சொல்லி உள்ளீரா என்றால் இல்லை. புகாரில் எதிரி நிறுவனத்திற்கும் எனது நிறுவனத்திற்கும் கடைசியாக எவ்வளவு தொகைக்கு பண பரிவர்த்தனை நடைபெற்றது என்றும் அதில் எவ்வளவு தொகை நிலுவையில் உள்ளது என எடுத்துரைக்க தனியாக கணக்கு பட்டியல் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் கணக்கு பட்டியல் எதுவும் தாக்கல் செய்யவில்லை ஆனால் நிலுவை தொகை மட்டும் புகாரில் குறிப்பிட்டுள்ளேன். எதிரி நிறுவனம் எனது நிறுவனத்திற்கு நிலுவை தொகை செலுத்த வேண்டும் என புகாரில் குறிப்பிட்ட நிலையில் அது பற்றி இன்வாய்ஸ் ரசீது அல்லது கணக்கு பட்டியல் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீரா என்றால் இல்லை.

5. அந்த ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளீரா என்றால் தயாராக உள்ளேன். இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலையானது நானும் எதிரியும் முதன்முதலாக 12.04.2019 அன்று வியாபாரம் தொடங்கும்போது செக்யூரிட்டியாக வழங்கப்பட்ட 3 காசோலை என்றாலும் அந்த காசோலையை 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்டதாக குறிப்பிட்டு தவறாக வழக்கில் தாக்கல் செய்து உள்ளீரா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் மூன்று காசோலைகளிலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள காசோலைத்தொகை மற்றும் காசோலையில் உள்ள இதர விபரங்கள் வெவ்வேறான பேனா மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

வழக்கு காசோலையை எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து கொடுத்தார் என்றால் 02.03.2021 அன்று எதிரியே என்னிடம் வந்து கொடுத்தார் எனது அலுவலகத்தில் வைத்து கொடுத்தார். எத்தனை மணிக்கு கொடுத்தார் என்றால் பத்து முதல் பத்தரை மணி அளவில் கொடுத்தார். யார் முன்னிலையில் கொடுத்தார் என்றால் பக்கத்தில் யாரும் அப்போது இல்லை. அந்த விபரங்களை புகாரில் குறிப்பிட்டுள்ளீரா என்றால் இல்லை. வழக்கு காசோலையில் உள்ள விபரங்களை நானே பூர்த்தி செய்து கொண்டேனா என்றால் இல்லை எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தார்.

6. வழக்கு காசோலைகளை எதிரி பூர்த்தி செய்து கொடுத்திருந்தால் அதில் உள்ள எழுத்துக்களில் ஒரே பேனா மையினால் எழுதப்பட்டிருக்கும் என்றாலும் வெவ்வேறு பேனா மையினால் எழுதப்பட்டுள்ள நிலையில் நான் சொல்வது போல் மேற்படி காசோலைகளை எதிரி பூர்த்தி செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதி முதல் எனது நிறுவனத்திற்கும் எதிரி நிறுவனத்திற்கும் வியாபாரம் நிறுத்தப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. எந்த வருடம் என்று ஞாபகம் உள்ளதா என்றால் கணக்கு பட்டியலை பார்த்தால் தான் தெரிய வரும் புகாரை பார்த்து சொல்ல முடியுமா என்றால் புகாரியில் நான் கணக்கு பட்டியலை ஏதும் தாக்கல் செய்யவில்லை. எத்தனை வருடம் எதிரியின் நிறுவனத்துடன் வியாபாரம் செய்து வந்தீர்கள் என்றால் 18 அல்லது 19 மாதங்கள் வியாபாரம் செய்து வந்தேன். நான் சொல்வதைப் போல் எதிரியின் நிறுவனத்துடன் 18 மாதங்கள் வியாபாரம் ஏதும் செய்யவில்லை என்றாலும் 12.04.2019 முதல் 09.12.2019 வரை மட்டுமே எதிரி நிறுவனத்துடன் வியாபாரம் நடைபெற்றது என்றால் நிறுவனத்தில் கணக்கு பட்டியலை பார்த்தால் தான் தெரியவரும். உண்மையில் எதிரியுடன் வியாபார பரிவர்த்தனை ஏற்பட்டு இருந்தால் அதற்கு உண்டான அனைத்து ஆவணங்களையும் இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் நான் சொல்வது போல் எவ்வித பரிவர்த்தனை ஏற்படாததால் தான் மேற்படி ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அந்த ஆவணங்களை தாக்கல் செய்தால் பரிவர்த்தனை தொடர்பான உண்மை விபரங்கள் தெரிந்து விடும் என்பதால் அதனை வழக்கில் நான்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 09.12.2019 தேதியில் கடைசியாக பரிவர்த்தனை ஏற்பட்டதில் நிலுவைத் தொகையாக ரூபாய் 2,33,707 என்ற தொகை மட்டுமே நிலுவையில் இருந்தது என்றாலும் வழக்கு காசோலை வழங்கப்பட்டதாக குறிப்பிடும் தேதியில் எதிரியின் நிறுவனத்திடம் இருந்து எவ்வித நிலுவை தொகை எனது நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியது கிடையாது என்றாலும் வழக்கு காசோலையில் குறிப்பிட்டுள்ள தொகையும் எனது நிறுவனத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை கிடையாது என்றால் சரியல்ல எனது நிறுவனத்தின் கணக்கு பட்டியல் அடிப்படையில் தான் மேற்படி காசோலை நிலுவை தொகை இருந்தது.

7. எனது நிறுவனத்திற்கும் எதிரியின் நிறுவனத்திற்கும் 12.04.2019 முதல் 09.12.2019 வரை 15 வியாபார பரிவர்த்தனைகள் நடைபெற்று உள்ளது என்றாலும் அந்த பரிவர்த்தனைகளுக்கு உரிய இன்வாய்ஸ்களுக்கு தொகையை செலுத்தியுள்ளார் என்றாலும் ஆனால் நான் அந்த விபரத்தை மறைத்து விட்டு சட்டபடியாக எதிரியின் நிறுவனம் ரூபாய் 2,33,707 தொகை மட்டுமே திருப்பி செலுத்த வேண்டியது என்றாலும் ஆனால் நான் கூடுதலாக தொகை குறிப்பிட்டு வழக்கு காசோலையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. கடைசியாக எப்போது எதிரி எனது நிறுவனத்திற்கு தொகை செலுத்தி நிறுத்திவிட்டார் என்றால் ஜனவரி பிப்ரவரி 2021 ஆம் ஆண்டு எதிரியுடன் தொகையைக் கேட்டபோது மார்ச்சில் தருவதாக சொல்லி நிறுத்திவிட்டார். நிறுவன வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லி உள்ளீரா என்றால் இல்லை. இவ் வழக்கில் தாக்கல் செய்துள்ள காசோலைகள் அனைத்தும் எதிரியின் நிறுவனம் எனது நிறுவனத்துடன் தொழில் தொடங்கிய போது செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட காசோலைகள் என்றாலும் அந்த காசோலைகளானது விபரங்கள் பூர்த்தி செய்யாமல் வெற்று காசோலைகளாக வழங்கப்பட்டுள்ளது என்றாலும் அந்த காசோலையை எனக்கு தேவையான தொகையை நிரப்பி இவ்வழக்கில் தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது உண்மை இல்லை.

8. இவ்வழக்கில் பிசினஸ் இன்வாய்ஸ் மற்றும் எனது நிறுவனத்தின் கணக்கு பட்டியல் ஆகியவற்றை தாக்கல் செய்யாமல் காசோலை மற்றும் திருப்புதல் குறிப்பாணை ஆகியவற்றை மட்டும் இவ்வழக்கில் தவறாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**

**மறுவிசாரனை இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

**S/d xxxx**

District Munsif-cum
Judicial Magistrate
Pallavaram.